**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**S.நாகராஜன்** — **தலைவர்**
**K.சந்திரசேகரன்,B.A** — **பொதுச்செயலாளர்**
**B.தியாகராஜன், M.Com.,** — **நிதிச்செயலாளர்**

கடித எண்: 66/19
26-03-2019

பெறுநர்,
தலைமைப் பொறியாளர் /பணிஅமைப்பு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை – 2.

ஐயா,

பொருள் : கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம் - உறுப்பினர்கள் தொடர்பான கோரிக்கைகள் குறித்த முறையீடுகள் - தீர்வு காண நடவடிக்கை மேற்கொண்டிட வேண்டுகோள்.

********

எங்களது உறுப்பினர்கள் தொடர்பான கோரிக்கைகள் குறித்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கடிதங்கள் வாயிலாக தங்களிடம் முறையீடுகள் செய்துள்ளோம்.

1. பகுதிநேர துப்புரவுப் பணியாளர்கள் தொடர்பான பல்வேறு பிரச்சனைகளில் தீர்வுகாண நேரடி பேச்சுவார்த்தைகள் நடத்திட நாளினையும், நேரத்தையும் ஒதுக்கிட வேண்டுகோள்.
   பார்வை: எங்களது 14-11-2018 தேதியிட்ட கடித எண்:123/18.
2. நாமக்கல் மின்பகிர்மான வட்டம் துணைக்கோட்டங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு அலுவலர் பொறுப்புகள் தலைமையிடங்கள் மாற்றம் செய்திட வேண்டுகோள்.
   பார்வை: எங்களது 12-12-2018 தேதியிட்ட கடித எண்:143/18.
3. வடசென்னை அனல்மின்நிலையம் IIல் பணியாற்றிவரும் திரு.A.ஜோபெர்னாண்டஸ் சராங் Iநிலை அவர்களுக்கு வடசென்னை அனல்மின்நிலையம் Iக்கு மாறுதல் உத்திரவு வழங்குதல் குறித்து.
   பார்வை: எங்களது 01-02-2019 தேதியிட்ட கடித எண்:30/19.

எங்களது மேற்கண்ட கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு இதுநாள் வரை தீர்வு காணப்படாமல் உள்ளது.

எனவே இப்பிரச்சனையில் தாங்கள் தலையிட்டு எங்களது உறுப்பினர்கள் தொடர்பான மேற்கண்ட கோரிக்கைகளில் விரையில் தீர்வு காண தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிட வேண்டுகின்றோம்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

இணைப்பு : 3
நகல் : 1. அமைப்புச் செயலாளர் /மேட்டூர். 2. இணைச்செயலார் /எண்ணூர்.
3. தலைவர் /கோவை.